வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
01.06.2026 திங்கட்கிழமை
இதழ் : 146
பக்கங்கள் : 08




# ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் அதிகளவு ஊடகர்கள் கொலை!

## சிறிநேசன் எம்.பி. குற்றச்சாட்டு



மட்டக்களப்பு, ஜூன் 01

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போதுதான் அதிகளவான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டார்கள். ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தில், அவர்கள் தமிழ்த் தேசிய அரசியலை அழிக்கவேண்டும் என்ற ஒரு போக்கில் செயற்பட்டார்கள் என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டதன் விளைவுதான், தொடர்ந்தும் படுகொலைகள் நடைபெற்றதற்குரிய காரணமாக இருந்தது.

07

# ரில்வின் சில்வாவின் கருத்து தமிழரை அவமதிக்கும் செயல்!

## மனோ கணேசன் விமர்சனம்



கொழும்பு, ஜூன். 01

மாகாண சபை தேர்தல் குறித்து ரில்வின் சில்வா வெளியிட்டுள்ள கருத்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்களை அவர் தரக்குறைவாக மதிப்பிடுவதையே பிரதிபலிக்கின்றது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் விமர்சித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

மாகாண சபை தேர்தல் குறித்து ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்து, தமிழ் அரசியல் கட்சிகளை அன்றி வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்களையே அவர் தரக்குறைவாக மதிப்பிடுவதை பிரதிபலிக்கின்றது. "நாடு முழு வதும் இல்லாவிட்டாலும் வடக்கு கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்காவது மாகாண

07

# நாணய நிதியத்தின் நிதி உதவி இந்த வாரத்துக்குள் கிடைக்கும்!

கொழும்பு, ஜூன் 01

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் ஆறாவது மற்றும் ஏழாவது தவணை நிதிகள், ஜூன் மாதத்தின் முதல் வாரத்திற்குள் இலங்கைக்குக் கிடைக்கப்பெறும் என நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், மே மாதம் 27ஆம் தேதி அங்கீகரிக்கப்பட்ட கூடுதல் நிதியுடன், 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கிய 48 மாத திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட

07

# பொருளாதார ஆபத்தை நோக்கி மீண்டும் நகர்கின்றது இலங்கை!

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை



கொழும்பு, ஜூன். 01

இலங்கை ரூபாயை வலுப்படுத்துவதே தனது பொருளாதாரக் கொள்கையின் முதன்மையான நோக்கமாக இருந்தது எனத் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கையாளுமைகளையும் டொலர் நெருக்கடியையும் கடுமையாக விமர்சித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற

07

# பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 01

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் டீசல் விலையை உயர்த்திய போதிலும், பஸ் கட்டணங்களில். எந்தவொரு

07

# காணாமல்போன மீனவர்கள் இந்திய எல்லையில் தேடுதல்

## சாதகமான முடிவுகள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 01

வடமராட்சி கடலிலிருந்து கடந்த 27 ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன மீனவர்கள் நால்வர் தொடர்பில் விசேட அனுமதியுடன் இந்திய எல்லை வரை தேடியும் சாதகமான முடிவு கிடைக்கவில்லை என யாழ்.மாவட்ட கடத்தொழில் நீரியல் வளத் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் அகிலன் தெரிவித்தார்.

வடமராட்சியில் காணாமல்போன மீனவர்கள்

07

# மின்தடை குறித்து பௌத்த மக்களிடம் அமைச்சர் மன்னிப்பு கோர வேண்டும்!

## அசேல சம்பத் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 01

வெசாக் பௌர்ணமி தினத்தில் நாடளாவிய ரீதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமைக்கு மின்சாரத் துறை அமைச்சரானவர், ஒட்டுமொத்த பௌத்த மக்களிடமும் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அசேல சம்பத் விசனம் வெளியிட்டுள்ளார்.

தேசிய நுகர்வோர் முன்னணி காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

07

# சிறுவர் பாதுகாப்பு பேச்சில் மட்டுமே; பாதிக்கப்பட்டோருக்கு நீதி இல்லை!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 01

இலங்கையில் சிறுவர்கள் மற்றும் மாணவிகளின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் பல்வேறு மட்டங்களில் விளம்பரப்படுத்தி வரும் போதிலும், கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடூரச் சம்பவங்களுக்கு இன்னும் முறையான நீதி கிடைக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அவசர

07

# உலக சந்தையின் மாற்றத்தாலேயே எரிபொருள்களின் விலை அதிகரிப்பு!

## அசித நிரோஷன எம்.பி. விளக்கம்

கொழும்பு, ஜூன். 01

உலகச் சந்தையில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு மற்றும் சர்வதேச ரீதியிலான சவால்களின் காரணமாகவே உள்நாட்டில் தற்காலிகமாக எரிபொருள் விலைகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசித நிரோஷன தெரிவித்தார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த அவர்,

07

# ஐந்து முக்கிய மருத்துவமனைகளுக்கு புற்றுநோய் சோதனை இயந்திரங்கள்

கொழும்பு, ஜூன் 01

இலங்கையின் பொதுச் சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளிப்பதற்காக 5 நவீன மம்மோகிராபி பரிசோதனை இயந்திரங்களை முக்கிய அரச மருத்துவமனைகளுக்கு அறிமுகப்படுத்தும் விசேட வேலைத்திட்டமொன்றைச் சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சு ஆரம்பித்துள்ளது.

மொத்தமாக 765 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த நவீன மருத்துவ உபகரணங்கள்,

07

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலி.வடக்கில் காணிகளை விடுவிப்போம் ஆனால் கால எல்லையைக் கூற முடியாது!

## இளங்குமரன் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 01

வலி. வடக்கில் உள்ள மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் குறிப்பிட்ட கால எல்லையை எம்மால் கூற முடியாது. பாதுகாப்பு பிரதி அமைச்சர் நேரில் வந்து நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளார். அது தொடர்பில் பாராளுமன்றில் நடைபெறவுள்ள பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு , உடனடியாக விடுவிக்கக் கூடிய காணிகளை விடுவிப்போம் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வடக்கில் உள்ள இராணுவ கட்டமைப்பை எவ்வாறு மறுசீரமைத்து , மக்களின் காணிகளை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார்

இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆராய்வதற்கே வடமாகாண ஆளுநர், அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய உயர் மட்டக் குழு மக்களின் காணிகளில் அமைந்துள்ள இராணுவ முகாம் தொடர்பில் ஆராய்ந்துள்ளது.

அதில் முக்கியமாக விமான நிலைய விஸ்தரிப்புக்கு தேவையான காணிகள் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது , விமான நிலையத்திற்கு என முன்னரே பெறப்பட்ட காணிகளுக்கான நட்ட ஈடுகள் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது. அதனை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அத்துடன் விமான நிலைய விஸ்தரிப்புக்காக எத்தனை ஏக்கர் காணி தேவை என்பது தொடர்பில் தகவல்களைச் சேகரிக்க ஆரம்பித்துள்ளோம்.


கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அடுத்த விமான நிலையமாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அமைக்கவே எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதனால் அவற்றுக்கு தேவையான காணிகளை சுவீகரித்துக்கொண்டு , அக்காணிகளுக்கான இழப்பீடுகளை காணி உரிமையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் , ஏனைய காணிகளை மக்களிடமே மீள கையளிப்போம்.

துரித நடவடிக்கையாக வலி. வடக்கில் சில இடங்களில் இராணுவ முகாம்கள் இல்லாது , இராணுவம் வெளியேறிய பின்னரும் அவை இராணுவ கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

அத்துடன் வழிபாட்டுத் தலங்கள் , பாடசாலைகள் என்பவற்றையும் அடையாளப்படுத்தி அவற்றையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காணி விடுவிப்பு தொடர்பில் எம்மால் கால எல்லையை கூற முடியாது. இதற்கான பொறிமுறைகள் உள்ளன-என்றார்.

# கல்லடியில் தீ மிதிப்பு விழா



மட்டக்களப்பு, ஜூன் 01

மட்டக்களப்பு, கல்லடி சிறீ வேலாயுதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த அலங்கார மகோற்சவத் திருவிழாவின் இறுதி நாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, அடியவர்களின் "அரோகரா" கோசங்களுக்கு மத்தியில் தீ மிதிப்பு நிகழ்வு மிக விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.

கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை "வாஸ்து சாந்தி"யுடன் ஆரம்பமான இந்த வருடாந்த அலங்கார மகோற்சவத் திருவிழா, தொடர்ந்து 9 நாள்கள் சிறப்பு வழிபாடுகளுடன் இடம்பெற்று வந்தது.

விழாவின் இறுதி நாளான நேற்று அதிகாலை, கல்லடி பெருநிலப்பரப்பைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட தீமிதிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதற்கு முன்னதாக, முருகப்பெருமான் அழகிய சப்புறத்தில் எழுந்தருளி, வெளி வீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார். அதனைத் தொடர்ந்து, கடுமையான விரதங்களை அனுஷ்டித்த பக்தர்கள் செந்தழல் மீது பக்திப் பரவசத்துடன் நடந்து சென்று தமது நேர்த்திக் கடனைச் செலுத்தினர்.

தீ மிதிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, சமுத்திர நீராடல் முடிவுற்றதும் ஆலயத்தில் பொன்னூஞ்சல் ஆகிய சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று விழாவின் நிறைவாக, ஆலயத்திற்கு வருகை தந்த ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது . (அ)

# இலங்கைத் தமிழ் பெண் சென்னையில் கொலை!

சென்னை, ஜூன். 01

தமிழ்நாடு தலைநகர் சென்னையில் உள்ள பிரபல மதுபானச் சாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் மோதலின் உச்சகட்டமாக, எதிர்த்தரப்பினர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது கார் ஏற்றி, இலங்கையைச் சேர்ந்த தமிழ் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இக்கொடூர சம்பவத்தில் 'யான்சி' என்ற இலங்கைத் தமிழ் பெண்ணே சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந் துள்ளார்.

சென்னை கோயம்பேடு பகுதியில் அமைந்துள்ள மதுபான விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு சிலர் மது அருந்திவிட்டு நடனமாடிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இதன்போது அங்கு வந்த இரு தரப்பினரிடையே திடீரென கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டு, அது பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது.

நிலைமை கையை மீறிச் சென்றதை அடுத்து, அங்கிருந்த பாதுகாப்பு ஊழியர்கள் இரு தரப்பையும் சமாதானப்படுத்தி, மதுபான விடுதியை விட்டு உடனடியாக வெளியேற்றினர்.

மதுபான விடுதியை விட்டு வெளியே வந்த பின்னரும் இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் ஓயவில்லை.

கோயம்பேடு வீதியில் வைத்து மீண்டும் இரு தரப்பும் கடுமையாக மோதிக்கொண்டனர்.

இந்த மோதலின் உச்சகட்டமாக, ஆத்திரமடைந்த ஒரு தரப்பினர், எதிர்தரப்பினர் சென்ற மோட்டார் சைக்கிள் மீது தங்களது சொகுசுக் காரை மிக வேகமாக ஏற்றியுள்ளனர்.

இந்த சம்பவத்தின் போது காரின் அடியில் சிக்கி யான்சி என்ற பெண் சம்பவ இடத்திலேயேஉயிரிழந்தார்.

அத்துடன், அவருடன்மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரு சிறுமியும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், தீவிர சிகிச்சைக்காகச் சென்னை அரசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து தகவல் அறிந்த கோயம்பேடு பொலிஸார் உடனடியாக விரைந்து வந்து பெண்ணின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். (அ)

## மின்வெட்டு குறித்து சஜித் விமர்சனம்

கொழும்பு, ஜூன் 01

மின்வெட்டுக்கு முதலில் ஒரு குரங்கு மீது பழி சுமத்திய அரசாங்கம், பின்னர் அதனை கடந்த அரசாங்கங்கள் மீது சுமத்தியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மின்வெட்டு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது எக்ஸ் கணக்கில் பதிவொன்றை இட்டு இதனை தெரிவித்துள்ளார்.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் உண்மையான பிரச்சினை என்ன என்பதை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய மின் உற்பத்தியை அதிகரிக்கத் தவறியதும், குறைந்த தேவை காலங்களை நிர்வகிக்காத பலவீனமான நிர்வாகமும் மின் தடைக்கு முக்கிய காரணம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஹங்கம கடல் அலையில் அள்ளுண்ட 3 மாணவர்களும் சடலங்களாக மீட்பு!

கொழும்பு, ஜூன் 01

ஹங்கம, களமெட்டிய கடற்பகுதியில் நீராடச் சென்ற போது அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன மூன்று பாடசாலை மாணவர்களும் நேற்றுக் காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை இந்த துரதிர்ஷ்டவசமான விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

பொலிஸாரின் தகவல்களின் படி, உயிரிழந்த மூன்று மாணவர்களும் 12, 17 மற்றும் 18 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மாணவர்கள் அனைவரும் /ஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒரே பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வார இறுதி விடுமுறையைக் கழிப்பதற்காக மாணவர்கள் குழுவாகக் களமெட்டிய கடற்கரைக்குச் சென்று கடலில் நீராடியுள்ளனர்.

இதன்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கடுமையான கடல் அலை காரணமாக இந்த மூன்று மாணவர்களும் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டுக் காணாமல் போயிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பிரதேச கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து நேற்று மாலை முதல் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், நேற்றுக் காலையிலேயே மூவரின் சடலங்களும் கடற்கரையோரமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சடலங்கள் தற்போது உடற்கூறாய்வுப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹங்கம பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தையிட்டி திஸ்ஸ விகாரையை படம் பிடித்த குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 01

தையிட்டி விகாரை பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடி புகைப்படங்களை எடுத்த குற்றச்சாட்டில் கைதான யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரு இளைஞர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பலாலி பொலிஸ் நிலையத்துக்கு சென்று கையெழுத்து இடவேண்டும் எனும் நிபந்தனையும் விதித்துள்ளது.

வெசாக் தினத்தை முன்னிட்டு, தையிட்டி விகாரையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை வழிபாடு நடைபெற்ற நிலையில், விகாரைக்கு சற்று தொலைவில் காணி உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் வடமராட்சி பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் விகாரைக்கு செல்வதாகக் கூறி விகாரை பகுதிக்கு சென்று அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடி புகைப்படங்களையும்எடுத்துள்ளனர்

இதனை அவதானித்த பொலிஸார் இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்தவேளை முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கியதை அடுத்து , இருவரையும் கைது செய்து பலாலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.06.2026 திங்கட்கிழமை

பராபவ வருடம், வைகாசி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மகிந்தவும் மகாநாயக்கர்களும்

பௌத்த உயர் பீடங்களின் தலைவர்களான மகாநாயக்கர்கள் கூறுவதை அரசியல் தலைவர்களோ அல்லது பொதுமக்களோ கேள்வி எழுப்பாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச சில தினங்களுக்கு முன்னர். தெரிவித்த கருத்து இலங்கையின் சமூக - அரசியல் தளங்களில் வெவ்வேறு விதமான வாதங்களை தோற்றுவித்திருக்கிறது.

சிறுமி ஒருத்தியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி விவகாரத்தை அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் கையாண்ட முறை தொடர்பில் உருவான சர்ச்சைக்கு மத்தியிலேயே அவர் அவ்வாறு கூறினார்.

மகாநாயக்கர்கள் ஒருபோதுமே தவறான முறையில் பேசமாட்டார்கள் என்ற நம்பிக்கையில் மகிந்த அவ்வாறு சொன்னாரா அல்லது மகாநாயக்கர்கள் தவறாக எதையாவது கூறினாலும் கேள்வி எழுப்பால் அதன்படி நடப்பது தங்களது கடமை என்ற அர்த்தத்தில் அவ்வாறு சொன்னாரா என்று தெரியவில்லை.

இலங்கையின் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்த அரசாங்கத்தின் தலைவராக இருந்த காரணத்தினால் நாட்டை குறிப்பாக, சிங்கள பௌத்த சமூகத்தைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கு “பிரத்தியேகமான தகைமை” தனக்கு இருப்பதாக ஒரு நம்பிக்கையுடன் வாழ்பவர் மகிந்த.

அதேவேளை, சுதந்திர இலங்கையில் இது கால வரையில் பதவியில் இருந்த அரசாங்கங்களில் தவறான ஆட்சி முறைக்கும் படுமோசமான ஊழல் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவுக்கு “பெயர்போன” அரசாங்கம் அவரது தலைமையின் கீழ் இருந்த அரசாங்கமேயாகும். அதனால், மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவதற்கு தனக்கிருக்கும் தகுதி குறித்து மகிந்த தன்னை முதலில் சுய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

வரலாற்று ரீதியாக இலங்கையின் பௌத்த மன்னர்கள் மகா சங்கத்தினரின் ஆலோசனைகளைக் கேட்டு ஆட்சியை நடத்தியிருக்கலாம். ஆனால், நாம் இன்று வாழ்வதோ நவீன ஜனநாயக குடியரசில். அதனால், கேள்வியின்றி மகாநாயக்கர்களுக்கு கீழ்ப்படிவது என்பது பகுத்தறிவுக்கு முரணானது.

ஜனநாயக குடியரசில் இறையாண்மை மக்களிடமே உள்ளது என்று அரசியலமைப்பில் எழுதி வைத்துக் கொண்டு “மதத் தலைவர்களின் அதிகாரத்தை” கேள்விக்கு அப்பாற்பட்டது என்று கூறுவது ஜனநாயகப் பொறுப்புக்கூறல், பாராளுமன்ற மேலாண்மை மற்றும் பொதுக் கொள்கைகளை உருவாக்குவதற்கு அவசியமான விமர்சன பூர்வமான சிந்தனை ஆகியவற்றைச் சீர்குலைக்கும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது.

# இஸ்ரேலும் காசாவும்

## மேலும் ஒரு மனிதாபிமானப் பேரழிவின் அச்சுறுத்தல்



“நான் என்ன செய்யச் சொல்கிறேனோ, அதை அவர் செய்வார்,” என்று ஈரானுக்கு எதிரான தங்களின் சட்டவிரோதப் போர் குறித்த விவாதங்கள் குறித்து பெஞ்சமின் நெதன்யாகுவை பற்றி டொனால்ட் ட்ரம்ப் கூறினார். தெஹ்ரானுடன் (ஈரான்) ஒருவித உடன்பாட்டை எட்டுவது குறித்த தனது இறுதி முடிவை எடுத்து வருவதாக அமெரிக்க அதிபர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார். இஸ்ரேலின் முதன்மை நட்பு நாடு, நிதியுதவி வழங்குபவர் மற்றும் ஆயுத விநியோகஸ்தர் என்ற முறையில், அமெரிக்காவால் அதன் பிரதமரைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் ஈரானிய விவகாரத்தில் தனது கைகள் கட்டப்பட்ட நிலையில், நெதன்யாகு மற்ற இடங்களில் போரை மீண்டும் மூட்டுவதில் குறியாக இருப்பது போல் தெரிகிறது. லெபனானில் இஸ்ரேலின் கொடூரமான தாக்குதல் தீவிரமடைதல் என்பது, தங்களுக்கு சாதகமான சூழல் இருக்கும்போதே பகுதிகளைக் கைப்பற்றுவதற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம், அல்லது ஈரானுடனான அமைதி முயற்சியைக் குலைப்பதற்கான ஒரு உத்தியாக இருக்கலாம். காசாவின் எதிர்காலமோ இன்னும் மோசமாக உள்ளது.

ட்ரம்ப் மத்திய கிழக்கில் ஒரு புதிய அமைதி ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசி வரும் வேளையில், ட்ரம்பின் முந்தைய முயற்சியை நெதன்யாகு தவிடுபொடியாக்கி வருகிறார். இஸ்ரேல் இந்த வாரம் மற்றொரு ஹமாஸ் இராணுவத் தளபதியைக் கொன்றது, ஆனால் இந்த போரானது ஹமாஸ் அமைப்பை அழிப்பதாகக் கூறிய தனது இலக்கில் தோல்வியடைந்துள்ளது. அதே நேரத்தில் பொதுமக்களுக்கு அளவிட முடியாத கொடூரங்களை அது விளைவித்துள்ளது.

இஸ்ரேலியப் படைகள் தாங்கள் தற்காலிகமாக வைத்திருக்க ஒப்புக்கொண்ட பாதியளவு பகுதிக்கும் அப்பால் விரிவடைந்து, தங்களின் நிலைகளைச் சுற்றியுள்ள வரையறுக்கப்படாத மண்டலத்தில் உள்ள பாலஸ்தீனியர்களைத் தாக்கி வருகின்றன, மேலும் காசாவின் உட்பகுதிகளில் வான்வழித் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றன. இருப்பினும், டிரம்ப் நியமித்த சமாதான சபையின் (Board of Peace) உயர்மட்ட தூதரான நிக்கோலே ம்லாடெனோவ், போர்நிறுத்த முயற்சி முடங்கியதற்குக் காரணம் ஹமாஸ் தான் என்று குற்றம் சாட்டியுள்ளார்.

இப்போது காசாவின் 70 சதவீதமான பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உத்தரவிட்டுள்ளதாக நெதன்யாகு கூறுகிறார். இது ஏற்கனவே அதிக மக்கள் நெருக்கடி கொண்ட காசா பகுதியின் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவான நிலப்பரப்பிற்குள், 20 இலட்சத்திற்கும் அதிகமான பாலஸ்தீனியர்களைக் கட்டாயமாக முடக்கும் செயலாகும்.

இதற்கிடையில், அவரது பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், காசாவிலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றும் இஸ்ரேலின் நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். அவர் இதை “சுயவிருப்ப இடப்பெயர்வு” என்று அழைக்கிறார். ஆனால், மக்களின் வீடுகளும் அத்தியாவசிய உள்கட்டமைப்புகளும் இடிபாடுகளாகக் கிடப்பதாலும், உணவு மற்றும் மருந்துகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாலும், அவர்கள் தொடர்ந்து இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாவதாலும் அவர்கள் வெளியேறுகிறார்கள் என்றால், அது சுயவிருப்பம் அல்ல: அது இனச்சுத்திகரிப்பு (ethnic cleansing). மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு மனிதாபிமானப் பேரழிவு அல்லது கட்டாய நாடுகடத்தல் ஆகிய இரண்டிற்கு இடையே ஒன்றைத் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு தேர்வே அல்ல.

நெதன்யாகுவும் அவரது கூட்டணிக் கட்சிகளும் அக்டோபர் மாதத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் கருத்துக் கணிப்புகளைப் பதற்றத்துடன் கவனித்து வருகின்றனர். அவர்களின் இந்த கருத்துக்கள் உள்நாட்டு அரசியல் ஆதரவைப் பெறுவதற்காகச் சொல்லப்படுபவை என்று நினைப்பது அப்பாவித்தனம் தான். ஆனால் காசாவின் அழிவையும், போர்நிறுத்த நிபந்தனைகளை இஸ்ரேல் மீறுவதையும் பார்க்கும்போது, இவற்றை வெறும் வெற்றுப் பேச்சு என்று ஒதுக்கித் தள்ளுவதும் அப்பாவித்தனமானது. இத்தகைய உள்நோக்கம் கொண்ட பிரகடனங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாதவை.

இருப்பினும், இதற்கான எதிர்ப்பு எங்கே? காசா உதவிக்கப்பல் விவகாரத்தில் (Gaza flotilla) மேற்கத்திய ஆர்வலர்களைத் தீவிர வலதுசாரி தேசிய பாதுகாப்பு அமைச்சரான இடாமர் பென்-க்வீர் நடத்திய விதம் குறித்து எழுந்த நியாயமான சர்வதேச ஆவேசமானது, பாலஸ்தீனிய கைதிகள் மீதான சித்திரவதைகள் குறித்த மௌனத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் முரணாக உள்ளது.

மோதல் மண்டலங்களில் பாலியல் வன்முறைகளில் ஈடுபடுவதாக நம்பத்தகுந்த வகையில் சந்தேகிக்கப்படும் அமைப்புகளின் கறுப்புப் பட்டியலில் தங்களைச் சேர்த்ததற்காக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இஸ்ரேலின் தூதர் வெள்ளிக்கிழமை புகார் தெரிவித்துள்ளார். (7 அக்டோபர் 2023 அன்று நடந்த கொடூரங்களைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஹமாஸ் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.)

இந்த வாரம் ருமேனியாவின் குடியிருப்புப் பகுதி மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியபோது எழுந்த கோபத்திற்கும், காசாவில் நடந்த தாக்குதல்கள் குறித்த மௌனத்திற்கும் இடையே இதே போன்ற ஒரு பெரிய இடைவெளி உள்ளது - அங்கு ஈத் அல்-ஆதா (பக்ரீத்) பண்டிகையின் முதல் நாளில் கொல்லப் பட்டவர்களில் ஐந்து குழந்தைகளும் அடங்குவர்.

காசாவில் இஸ்ரேலிய இராணுவக் கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவது குறித்து ஜெர்மனி தனது “கவலையை” தெரிவித்தது, ஆனால் இதுபோன்ற பல்லில்லாத விமர்சனங்களால் இஸ்ரேல் அசைந்து கொடுக்கவில்லை. ரஷ்யாவின் மீது பெரிய அளவில் செல்வாக்கு செலுத்த முடியாத ஐரோப்பிய அரசாங்கங்கள், தங்களின் நட்பு நாடாகவும் வர்த்தகக் கூட்டாளியாகவும் இருக்கும் இஸ்ரேலின் மீது உண்மையான அழுத்தத்தைக் கொடுக்க முடியும்.

ட்ரம்ப் அமைதியை உண்டாக்குபவராக நினைவுகூரப்பட விரும்பினால் - அவருடைய கடந்தகால வரலாற்றைப் பார்க்கும்போது இது சாத்தியமில்லை என்றாலும் - இஸ்ரேல் தனது காசா திட்டத்திற்குக் கட்டுப்படுவதையும், பாலஸ்தீனியர்கள் அமைதியாக வாழ்வதையும், காசாவின் மறுசீரமைப்புப் பணிகள் தொடங்குவதையும் அவர் உறுதி செய்ய வேண்டும்.

ஐரோப்பா எப்போதும் வலியுறுத்தும் விதிகளின் அடிப்படையிலான ஒழுங்கு மற்றும் தார்மீக நெறிமுறைகளை உண்மையிலேயே நம்பினால், அது இஸ்ரேலுடனான தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். அத்துடன் இந்த குற்றங்களுக்குத் துணையாக இருப்பதை நிறுத்த வேண்டும்.

(த கார்டியன் ஆசிரிய தலையங்கம், 29 மே ,2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 01 திங்கக்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 18
நல்ல நேரம் : 6.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பிரதமை




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப்போவது நல்லது. நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம்.

**இடபம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதர வகையில் நன்மை உண்டு. மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கடகம்**
அரசுகுடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும்.

**சிம்மம்**
உடன்பிறந்ததிட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். யோகா தியானம் என மனம் செல்லும்.

**கன்னி**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். அரசால் ஆதாயம் உண்டு.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வந்து சேரும். புதியவரின் நட்பால் உற்சாக மடைவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சில நேரங்களில் மன அமைதியற்ற நிலை ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**தனுசு**
கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். அனாவசிய செலவுகளை தவிர்க்கப்பாருங்கள்.

**மகரம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள்.புகழ் கவுரவம் கூடும் நாள்.

**கும்பம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள். செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள்.

**மீனம்**
இதுவரை இருந்த அசதி சோர்வு கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.


# சந்ததி மறவாச் சரித்திரம்-1981 ஜீன் 1: நெருப்பினில் கருகிய யாழ் நூலகம்



தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கர வாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக் கட்டம் என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரின வாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது எனலாம். தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசாநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜீன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக் கூடாது என்பதாகும். ஆனால் ஜெ.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர். அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,1977 , 1883இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே யாழ். நூலகமும் தீக்கிரையானது.




இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது.

நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டடத்தின்சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது. அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இச்சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே. ஆர். அரசாங்கம் முன்வர வில்லை. பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிந்த தனை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும் இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில்மூட்டிய தீயின்வெம்மை இனவிடுதலைப் போராட் டத்திற்கு மேலும் உரமூட்டி யது என்பதே உண்மை. இதற் காக மன்னிப்புக் கோரவோ நட்ட ஈடு வழங்கவோகூட முன் வராத ஜெ.ஆர் ஜெயவர்த்த னவும் அவரது படைகளும் பின்னரும் பல நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோலின் புதிய விலை 434 ரூபா டீசல் விலையும் 15 ரூபாவால் உயர்வு

## மண்ணெண்ணெய் விலை 285 ரூபா

கொழும்பு, ஜூன் 01

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஒட்டோ டீசல் 15 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 407 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. அத்துடன், லங்கா சுப்பர் டீசல் 20 ரூபா யால் அதிகரிக்கப்பட்டு 478 ரூபாயாக விற்பனை செய்யப்ப டவுள்ளது.

அதேநேரம், ஒக்டேன் 92 ரக பெற்றோல், 24 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 434 ரூபாயாக விற்பனை செய்யப்ப டவுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் 25 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 495 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. மண்ணெண்ணெய் 20 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 285 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

# மீனவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 01

முல்லைத்தீவு, காங்கேசன் துறை மற்றும் மன்னார் ஊடாக சிலாபம் வரையான கடற்பரப்புகளும், காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என வானிலை ஆய்வுத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த குறிப்பிட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணிக்கு 60 முதல் 65 கிலோமீற்ற்ர் வரை அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தீவைச் சுற்றியுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு சுமார் 50 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதன் காரணமாக, மீன்பிடி மற்றும் கடற்படைச் சமூகங்கள் இது குறித்து மிகவும் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# தேசிய சுற்றுச்சூழல் வாரம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 01

தேசிய சுற்றுச்சூழல் வாரம் நேற்று முன் தினம் முதல் ஜூன் மாதம் 5ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

இக்காலப்பகுதியில் மனப்பான்மை அபிவிருத்தி, தூய்மை, காற்று மாசடைவதைக் கட்டுப்படுத்தல், பல்லுயிர் பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் கடற்கரை சுத்திகரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

"துளிர்க்க இடமளியுங்கள்" எனும் கருப்பொருளின் கீழ் நடத்தப்படும் உலக சுற்றுச்சூழல் தின தேசிய மாநாடு, ஜூன் 5ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# நிலக்கரிப் பரிசோதனை தோல்வியா? அடியோடு மறுக்கும் எரிசக்தி அமைச்சு

கொழும்பு, ஜூன். 01

தாரஞ்ஜோத் நிறுவனத்திடமிருந்து அண்மையில் பெறப்பட்ட அவசரகால நிலக்கரி விநியோகங்கள் தரப் பரிசோதனைகளில் தோல்வியடைந்துள்ளதாக ஊடகங்களில் வெளியான குற்றச்சாட்டுகளை எரிசக்தி அமைச்சு நிராகரித்துள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள எரிசக்தி அமைச்சின் செயலாளர் தாரஞ்ஜோத் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட முதல் மூன்று நிலக்கரி விநியோகங்களும் உரிய தரத்தில் காணப்பட்டதாகவும், நான்காவது விநியோகம் தற்போது இறக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களில் பேசப்படும் குறிப்பிட்ட மாதிரியில் சாம்பலின் அளவு அதிகமாகக் காணப்பட்ட போதிலும், அது இன்னும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச எல்லைக்குள்ளேயே உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாம்பல் உள்ளடக்கம் அதிகமாக இருப்பதால் நிலக்கரியின் கலோரிப் பெறுமதி குறைவாக இருக்கும் என்று முன்வைக்கப்படும் வாதங்கள் முற்றிலும் தவறானவை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்த நிலக்கரி இன்னும் மின் உற்பத்தி நிலையத்திற்குப் பயன்படுத்தப்படாததால் இறுதித் தரவுகளைப் பெறாமல் எந்தவொரு திட்டவட்டமான முடிவுக்கும் வர முடியாது எனக் கூறியுள்ளார். (அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸை சீரமைக்கும் புதிய வணிக மாதிரி திட்டம் மிகவிரைவில்



கொழும்பு, ஜூன் 01

தேசிய விமானச் சேவையான சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தை மறுசீரமைப்பதற்கான புதிய வணிக மாதிரித் திட்டம் எதிர்வரும் வாரங்களில் இறுதி செய்யப்பட்டு அமைச்சரவை யின் ஒப்புதலுக்காகச் சமர்ப் பிக்கப்படவுள்ளதாகத் துறை முகங்கள் மற்றும் சிவில் விமா னப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு தெரிவித் துள்ளார்.

அன்றாடச் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்காக திறைசேரியிடமிருந்து கூடுதல் நிதியாக பத்து பில்லியன் ரூபாயை சிறீலங்கன் நிறுவனம் கோரியுள்ள பின்னணியிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சர்வதேச எரிசக்தி விவகாரங்கள் காரணமாக விமான எரிபொருள் விலை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதால் நிறுவனத்தின் இயக்கச் செலவுகள் அதிகரித்துள்ள போதிலும், கோரப்பட்ட நிதி இன்னும் விடுவிக்கப்பட வில்லை என பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதியாண்டில் சிறீலங்கன் நிறுவனம் இரண்டு தசம் ஏழு மூன்று பில்லியன் ரூபாய் நட்டத்தைப் பதிவு செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதன் முக்கியத்துவத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், இந்த நிறுவனத்தை மிகவும் திறமையானதாக மாற்றுவதற்குக் பொது மற்றும் தனியார் கூட்டு மாதிரித் திட்டம் குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தற்போதைய மொத்தக் கடன் பொறுப்பு 993.78 மில்லியன் அமெரிக்கடாலர்களாகக் காணப்படும் அதேவேளை, அரச வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட 91.3 பில்லியன் ரூபாய் கடன்களை மறுசீரமைக் கும் பணிகள் ஏற்கனவே நிறை வடைந்துள்ளதாகத் துறைமுகங் கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். (அ)

# அரச நிறுவனங்களில் இன்று முதல் பிளாஸ்ரிக் பாவனைக்குத் தடை!

கொழும்பு, ஜூன். 01

இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்ரிக் குதண்ணீர் போத்தல்களை கொள்வனவு செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் இன்று முதல் அதிரடித் தடை விதிக் கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப் பட்டுள்ள விசேட சுற்றறிக்கை மூலம் இந்த உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

இந்த புதிய சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய, அனைத்து அரச நிறுவனங்களுக்குள்ளும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் பொருட்களின் பயன்பாட்டைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஜனநாயகப் பயணத்தை வலுப்படுத்த மாகாண தேர்தலை நடத்த வேண்டும்!

## சிறீலங்கா ஜனநாயகக் கட்சி கோரிக்கை

கொழும்பு, ஜுன். 01

இலங்கை இன்று பொருளாதார மீட்சி, அரசியல் ஸ்திரத்தன்மை, சமூக நல்லிணக்கம் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட புதிய கட்டத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில், நீண்ட காலமாக செயலிழந்து காணப்படும் மாகாண சபை முறைமையை மீளச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும் என சிறீலங்கா ஜனநாயகக் கட்சி வலியுறுத்துகிறது.

ஜனநாயகக் கட்சி தலைவர் கலாநிதி அன்வர் எம். முஸ்தபா வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில், கடந்த பல ஆண்டுகளாக மாகாண சபைகள் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத நிர்வாக அமைப்புகளாக இயங்கி வருகின்றன. இதன் காரணமாக மாகாண மக்களின் தேவைகள், அபிவிருத்தித் திட்டங்கள், கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் அடிப்படை சேவைகள் தொடர்பான பல தீர்மானங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பின்றி மேற்கொள்ளப்படும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பல்வேறு பாரபட்சங்களும், முறைகேடுகளும் நடைபெறுகின்றன.

மாகாண சபைத் தேர்தல்களை தொடர்ச்சியாக ஒத்திவைத்து வருவது ஜனநாயகத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு முரணானது மட்டுமல்லாது, அரசியலமைப்பின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவ உரிமையையும் பாதிக்கின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை தனது அரசியல் கொள்கைகளின் மையமாகக் கொண்டுள்ளதாக தெரிவித்து வந்துள்ளது. எனவே, அந்தக் கொள்கைகளின் நடைமுறை வெளிப்பாடாக மாகாண சபைத் தேர்தலை அறிவித்து நடத்துவது அரசாங்கத்தின் அரசியல் மற்றும் தார்மீகப் பொறுப்பாகும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் மக்களின் அபிலாஷைகள், பிராந்திய அபிவிருத்தித் தேவைகள் மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்துடன் இணைந்த திட்டங்களை முன் னெடுப்பதற்கு செயற்படும் மாகாண சபைகள் அவசியமாகின்றன.

மத்திய அரசின் சுமையைக் குறைத்து, மக்களின் தேவைகளை அவர்களுக்கு நெருக்கமான நிர்வாக மட்டத்திலேயே தீர்க்கக்கூடிய அமைப் பாக மாகாண சபைகள் காணப் படுகின்றன.

நாட்டின் தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளவும், முதலீடுகளை ஊக்குவிக்கவும், பிராந்திய அபிவிருத்தியை சமநிலைப்படுத்தவும், மாகாணங்களின் செயற்பாட்டு பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். மக்கள் ஆணையைப் பெற்ற மாகாண நிர்வாகங்களே இந்தப் பணிகளை திறம்பட முன்னெடுக்க முடியும்.

எனவே, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான காலக்கெடுவுடன் கூடிய தெளிவான தேர்தல் அறிவிப்பை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உடனடியாக அறிவிக்க -என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# தேசிய மின் கட்டமைப்பில் இணையும் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகள்!

கொழும்பு, ஜுன். 01

தேசிய மின் கட்டமைப்புக்கு ஆதரவளிப்பதற்காக, இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படும் வர்த்தக அளவிலான ஆறு மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளின் முதலாவது தொகுதி நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

தேசிய மின்சார வலையமைப்பில் 160 மெகாவாட் ஒருங்கிணைந்த திறன் கொண்ட 16 மின்கல சேமிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்தும் பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த ஆறு அலகுகளும் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த திட்டத்திற்கான சர்வதேச போட்டி கொள்முதல் செயல்முறை கடந்த 2025 ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்டிருந்தது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின்படி, இந்த ஆறு அலகுகளும் மஹவ, வவுனியா, சுன்னாகம், கிளிநொச்சி, அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவையில் உள்ள முக்கிய மின் பரிமாற்ற துணை மின் நிலையங்களுக்கு அருகில் நிறுவப்படவுள்ளன: இந்த மின்கல அமைப்புகள் மதிய நேரங்களில், குறிப்பாக சூரிய மின் நிலையங்களில் இருந்து பெறப்படும் தேவைக்கு அதிகமான மின்சாரத்தைச் சேமித்து வைத்து, இரவில் மின்சாரத்திற்கான தேவை உச்சமடையும் காலப் பகுதியில் அதனை வெளியிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதன் ஒவ்வொரு அலகும் 40 மெகாவாட் அளவு மின்சாரத்தை ஒரு மணி நேரம் வரை சேமித்து வைக்கும் திறன் கொண்டதாகும், தேவைப்படும் போது 10 மெகாவாட் மின்சாரத்தை மின் கட்டமைப்புக்கு வழங்கும் திறன் கொண்டவையாகும்.

இதற்கமைய, இந்த ஆறு அமைப்புகளும் இணைந்து மின் தேவை அதிகமாக உள்ள காலப் பகுதியில் 60 மெகாவாட் மின்சாரத்தை விநியோகிக்கவுள்ளன.

கட்டமைப்பு அளவிலான இந்த மின்கல சேமிப்புத் தொழில்நுட்பம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த அமைப்புகள் எரிசக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய அமைப்பு இயக்குநரகம் மூலம் இயக்கப்பட்டு நிர்வகிக்கப்படவுள்ளதோடு, இதற்கான பராமரிப்புப் பொறுப்புகள் அந்தந்த உற்பத்தியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்படவுள்ளன.

# பௌத்த துறவிகள் குறித்த ஒழுக்காற்று நடவடிக்கைக்கு ஒரு நடைமுறை உள்ளது

கொழும்பு, ஜுன். 01

பௌத்த துறவிகள் குறித்த ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஒரு குறிப்பிட்ட நடைமுறை உள்ளதாகவும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு, மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ள அக்கட்சி, நாட்டில் நிலவும் பாரம்பரியத்தின்படியே அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு செல்லப்பட வேண்டும் எனவு குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் தொடர்புடைய சமூக ஊடகங்கள் மூலம் பௌத்த சாசனத்தையும், பௌத்த மதத்தையும் அழிப்பதற்கான திட்டமிட்ட வேலைத்திட்டமொன்று இன்று தாராளமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதில் சிவில் சமூகத்தின் ஒரு பகுதியினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று எப்போதும் பௌத்த துறவிகள் மற்றும் பௌத்த மக்களின் கருத்துக்கள் ஓரங்கட்டப்படும் நிலைமையே காணப்படுவதாக அந்த விசேட அறிவிப்பில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோ கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜுன் 01

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு இணையாக, மேல் மாகாணத்தில் ஓட்டோ கட்டணங்களையும் உயர்த்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேசிய ஒருங்கிணைந்த ஓட்டோ சாரதிகள் மற்றும் தொழிலதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஓட்டோக்களுக்கான முதலாவது கிலோமீற்றருக்கான கட்டணத்தை 130 ரூபாய் வரை உயர்த்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த செயலாளர்,கடந்த முறையில் ஒரு லீற்றர் பெற்றோல் விலை 12 ரூபாயினாலும், இம்முறை 24 ரூபாயினாலும் என, அண்மைய இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் எரிபொருள் விலை 36 ரூபாயினால் அதிகரித்துள்ளது. (அ)

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு சிட்னி - சிலோன் லயன்ஸ் அன்பளிப்பு




அம்பாறை, ஜுன் 01

சிட்னி சிலோன் ஆஸ்திரேலியா லயன்ஸ் கழகத்தினால் கல்முனை ஆதார வைத்தியசாலையின் சிகிச்சை சேவைகளை மேம்படுத்தும் நோக்கில், எலும்பியல் அறுவைச் சிகிச்சை தொடர்பான உபகரணங்கள், இலங்கை 306 டி10 மாவட்டத்தின் மட்டக்களப்பு நியூ, செஞ்சுரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சுகுணன் குணசிங்கம் மற்றும் என்பு பேரறிவு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ப. கலாவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அன்பளிப்பு செய்யப்பட்ட உபகரணங்கள், மட்டக்களப்பு நியூ செஞ்சுரி லயன்ஸ் கழகத்தின் சாசனத் தலைவர் லயன் என். புஷ்பஹரன் மற்றும் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் எம். சுதாகரன் ஆகியோரால் வைத்தியசாலைக்கு கையளிக்கப்பட்டன.

இவ்வாறான பெறுமதிமிக்க அன்பளிப்பின் மூலம் வைத்தியசாலையின் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகள் மேலும் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வன்பளிப்பை வழங்குவதற்கும் அதனை ஒருங்கிணைப்பதற்கும் பங்களிப்பு செய்த அனைவருக்கும் வைத்தியசாலையின் சார்பிலும், பணிப்பாளர் அவர்களினாலும் மனமார்ந்த நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. (அ)


# டித்வா நிவாரணப் பணிகள் தொடர்பிலான போலி பிரசாரத்துக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஜுன். 01

டித்வா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் முன்னெடுத்த நிவாரணப் பணிகள் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் போலிப் பிரசா ரங்களுக்கு எதிராக, இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத் தரணி சுபுன் விஜேரத்னவினால் மகரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- டித்வா சூறாவளி காரணமாக, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு. பொருட்களைச் சேகரித்து, வகைப்படுத்தி, அவற்றைச் சரியாகப் பொதி செய்து. பாதுகாப்பு அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் போன்ற அரசு நிறுவனங்களை ஒருங்கிணைத்து இந்த விநியோகத்தை செய்தோம். இந்த நடவடிக்கைகள் முடிவடைந்த நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்பு சஷிக திஸநாயக்க என்ற நபர் தனது முகநூல் கணக்கு மூலம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு மக்கள் நன்கொடையாக வழங்கிய பொருட்கள் இன்னும் அதன் பிரதான மண்டபத்தில் இருப்பதாகவும் இளைஞர் மன்றத்தின் பொருள்கள் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதாகவும் கூறி, முன்னதாகப் பதிவு செய்யப்பட்ட ஒரு வீடியோவைப் பயன்படுத்தி ஒரு தவறான பிரசாரத்தைச் செய்துள்ளார். தற்போது அத்தகைய பொருள்கள் எதுவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்குள் இல்லை. ஆடைகள் போன்ற சில பொருள்கள் எஞ்சியிருந்தவற்றை நாங்கள் இந்த 2026 புத்தாண்டு காலத்தில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு விநியோகித்து முடித்துவிட்டோம். இது தொடர்பாக, நாங்கள் மகரகம பொலிஸ் நிலையத்திற்கு வந்து முறைப்பாடு செய்துள்ளோம்- என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ராஜபக்ஷவின் ஆட்சியில்...

ஆகவே, குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலமாக, இந்த அரசாங்கம் தாங்கள் சரியான பாதையில், சரியான நீதியில் செல்லுகின்றோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 22ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபியில் அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சிறீநேசன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னவென்றால், அவரும் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். நடேசன் சுட்டுக் கொலை செய்யப்பட்டு 22 ஆண்டுகளைக் கடந்து நாங்கள் இங்கு நிற்கின்றோம்.

அவருக்குரிய நீதி கிடைக்கவில்லை. அவர் அழிக்கப்பட்டு, அவர்களுடைய எண்ணம் நிறைவேறியிருக்கிறது. அதாவது, ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சியில் இருந்த காலத்தில், அவர்கள் தமிழ்த் தேசிய சிந்தனையை, தமிழ்த் தேசிய அரசியலை அழிக்கவேண்டும் என்ற ஒரு போக்கில் செயற்பட்டிருந்தார்கள்.

அதற்காக ஏவலாளிகள் பலரை இங்கு நியமித்திருந்தார்கள். அந்த ஏவலாளிகள் விரல் நீட்டுகின்ற பக்கமெல்லாம் அவர்கள் வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டிருந்த ஒரு. அந்த அடிப்படையில் தான் ஜோசப் பரராஜசிங்கம் ஐயா கொல்லப்பட்டது, நடேசன் கொல்லப்பட்டது, தம்பையா விரிவுரையாளர் கொல்லப்பட்டது, இதேபோன்று சந்திரநேரு கொல்லப்பட்டது, ரவீந்திரநாத் கடத்திக் கொலை செய்யப்பட்டது என்பன நடந்தன.

இவ்வாறு, இந்த படுகொலைகளை மிகவும் வெற்றிகரமான முறையில் அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். இன்னும் நீதி கிடைக்கவில்லை. நீதிக்கான குரல், "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால், இதுவரை நீதி கிடைக்கவில்லை. ஆனால், இந்த அரச மாற்றத்தின் பின்னர் ஏதாவது நடக்குமா என்று எதிர்பார்த்தார்கள்.

சில குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், இன்னும் பல குற்றவாளிகள் நடமாடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களைக் கைது செய்யக்கூடிய சூழ்நிலை இனிவருங்காலத்தில் ஏற்படுமா என்ற கேள்வி எழுகின்றது.

43 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதிலும் 27 இற்கும் மேற்பட்டவர்கள் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போதுதான் கொல்லப்பட்டிருந்தார்கள்.

நடேசனை நினைவேந்துகின்ற இந்த நிகழ்வில், அவருக்குரிய நீதி கிடைக்கவில்லை. அவரைச் சுட்டவர்கள் யார் என மக்கள் கேட்டால் சொல்லுவார்கள். அந்த அளவுக்கு அதனை நேரடியாகப் பார்த்தவர்களும் இருக்கின்றார்கள். ஆகவே, அந்தக் கொலையாளிகள் தண்டிக்கப்படுகின்றபோது, அந்த இழப்பில் வருந்திக் கொண்டிருக்கின்ற அவருடைய உறவுகள், தமிழ் உறவுகள், எல்லோரும் ஓரளவுக்காவது நிம்மதி அடையக்கூடிய மாதிரி இருக்கும்.

ஆகவே, அதனை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். கொலையாளிகள், குற்றவாளிகள் தப்பித்து வாழ்வது என்பது, மிக மோசமான ஒரு அரசியலை எடுத்துக் காட்டும். கடந்த காலத்தில் குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டதன் விளைவுதான், தொடர்ந்தும் படுகொலைகள் நடைபெற்றதற்குரிய காரணமாக இருந்தது. ஆகவே, குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலமாக, இந்த அரசாங்கம் தாங்கள் சரியான பாதையில், சரியான நீதியில் செல்கின்றோம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்-என்றார்.

## நாணய நிதியத்தின்...

மொத்தத் தொகை 2.4 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

## பொருளாதார ஆபத்தை...

கலந்துரையாடலொன்றில் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை குறித்துக் கருத்து வெளியிட்ட அவர், தற்போதைய ஆட்சியாளர்களின் தொலைநோக்கற்ற கொள்கைகளால் நாடு மீண்டும் பாரிய பொருளாதார ஆபத்தை நோக்கி நகர்வதாக எச்சரித்தார். தற்போதைய பொருளாதாரப் பின்னடைவு குறித்துப் பேசிய ரணில் விக்ரமசிங்க, டொலரின் கட்டுப்பாட்டை அரசாங்கம் ஆரம்பத்திலேயே தவறவிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே டொலரின் மதிப்பை 280 ரூபா மட்டத்தில் தக்கவைப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. இன்று டொலர் 320 ரூபா வரை சென்றுவிட்டது. அதாவது 30 ரூபாவால் அதிகரித்துள்ளது. இப்போது இதனை எவ்வாறு முன்னோக்கிக் கொண்டு செல்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். வெளிநாட்டு கையிருப்புப் பற்றாக்குறை என்பது ஒரு நாட்டிற்கு ஏற்படும் மிகப்பெரிய வருமானப் பற்றாக்குறையாகும். இந்தத் பிரச்சினைக்கு மிக விரைவாகத் தீர்வு காணாவிட்டால் நாடு பேரழிவைச் சந்திக்கும்.

இந்தத் பிரச்னையானது, கடுமையான நோயால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனுக்குக் கால் உடைந்ததைப் போன்றது. அவன் நடந்து மருத்துவமனைக்குச் செல்வதற்காக நான் அவனது உடைந்த காலைக் குணப்படுத்திக் கொடுத்தேன். மருத்துவமனைக்குச் சென்ற பின்னர், 2024 ஆம் ஆண்டுக்குப் பிறகு அவனுக்கு அறுவை சிகிச்சை செய்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அதைச் செய்யவில்லை. இப்போது என்ன செய்ய முடியும். தடுக்கப்பட்ட இலங்கை - இந்திய திட்டங்களினால் நாட்டிற்கு 5 டிரில்லியன் பொருளாதாரம் இழப்பு ஏற்பட்டுள்ளது. தான் ஆட்சியில் இருந்தபோது இலங்கையை உலகப் பொருளாதாரத்துடன் இணைக்க எடுத்த தொலைநோக்கு முயற்சிகள் உள நாட்டு எதிர்ப்புகளால் முறியடிக்கப்பட்டது.

இந்தியாவுடன் இணைந்து சேதுசமுத்திரம் திட்டத்தையும், இரு நாடுகளுக்கும் இடையிலான பாலத்தையும் அமைக்க முயற்சித்தேன். ஆனால் இவை யாருடைய எதிர்ப்புகளினால் நிறுத்தப்பட்டன? அந்தத் திட்டங்கள் மட்டும் தொடங்கப்பட்டிருந்தால், சுமார் பத்து வருடங்களுக்கு நாட்டில் கட்டுமானப் பணிகள் தொடர்ச்சியாக நடந்திருக்கும். அதன் மூலம் 5 டிரில்லியன் ரூபா பெறுமதியான பொருளாதாரம் நமது நாட்டுடன் இணைந்திருக்கும். அதேபோல், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு எரிபொருள் குழாய் இணைப்பை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டிருந்தேன். அதற்கு இடம் கொடுத்தார்களா? இல்லை. போலி காரணங்களை கூறி எதிர்த்தனர். அதைச் செய்திருந்தால், இந்தியாவுக்குக் கிடைக்கும் அதே குறைந்த விலையிலேயே நமக்கும் தங்குதடையின்றி எரிபொருளைப் பெற்றிருக்க முடியும்.

தற்போதைய ஆட்சியாளர்கள் வங்கிகளுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்துள்ளனர். டொலரின் மதிப்பை 330 ரூபாவிற்கு மேல் அதிகரிக்கக் கூடாது என அவர்கள் உத்தரவிட்டுள்ளனர். விரைவில் 1 பில்லியன் டொலர் நாட்டுக்கு வரவுள்ளதாகக் கூறியே இந்த தற்காலிக அழுத்தத்தைப் பிரயோகிக்கிறார்கள். ஆனால், 1 பில்லியன் டொலர் வந்தாலும் சந்தையில் பெரிய மாற்றம் எதுவும் நடந்துவிடாது-என்றார். (அ)

## மின்தடை குறித்து...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புனிதமான வெசாக் பௌர்ணமி தினத்தில் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள விஹாரைகளுக்குச் சென்றும், தானங்களை வழங்கியும், பௌத்த வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், எவ்வித முன்னறிவித்தலும் இன்றி மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நாட்டின் பௌத்த சமய நிகழ்வுகளைப் பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த மின்வெட்டு, முற்றிலும் பொறுப்பற்ற செயலாகும். மின்சாரக் கட்டமைப்பின் சமநிலையைப் பேணுவதாகக் கூறி, பௌத்தர்களின் மிக முக்கியமான தினத்தில் மின்சாரத்தை துண்டித்தது எந்த வகையில் நியாயம்? மின்சாரத் துறை அமைச்சரானவர், இந்தச் சம்பவம் தொடர்பில் ஒட்டுமொத்த பௌத்த மக்களிடமும் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும். மகாநாயக்க தேரர்களின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டுவருவதுடன், பொறுப்புவாய்ந்த அமைச்சரின் விளக்கத்தை ஊடகங்களின் வாயிலாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்-என்றார்.

## காணாமல்போன...

தொடர்பாக எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவரைக் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல்போன மீனவர்கள் தொடர்பாக துறைசார் அமைச்சர் கடற்படையினருக்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் அடிப்படையில் குறித்த பகுதி மீனவர்களின் ஒத்துழைப்புடன் காணாமல் போன மீனவர்களை தேடும் பணி இடம்பெற்று வருகின்றது.

தற்போது கடலில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் தேடுதல் நடவடிக்கைகள் தடைப்படாமல் பாதுகாப்பாக உரிய அறிவுறுத்தலின் பிரகாரம் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் போன மீனவர்கள் இந்திய எல்லைப் பகுதிக்குள் திசை மாறிச் சென்று இருக்கலாம் என்ற தகவலின் அடிப்படையில் விசேட அனுமதி பெற்று மீனவப் படகுகள் குறித்த பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கரை திரும்பியிருக்கின்றன.

இந்தியா எல்லைக் கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான படகுகள் தென்படாத நிலையில் தொடர்ந்தும் குறித்த மீனவர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பில் இருக்கிறோம்-என்றார்.

## பஸ் கட்டணம்...

திருத்தமும் மேற்கொள்ளப்படமாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதை அடுத்து, ஓர் இடைக்கால பஸ் கட்டண திருத்தத்தை மேற்கொள்ளுமாறு லங்கா தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, எதிர்வரும் ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவிருக்கும்வருடாந்த பஸ்கட்டண திருத்தத்துக்கு முன்னதாக இந்த இடைக்கால திருத்தத்தை அமல்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

## ரில்வின் சில்வாவின்...

சபை தேர்தலை நடத்துமாறு" நான் கோரிய போது, அரசாங்கத்தின் பதில் வெறும் "சிரிப்பாகவே" அமைந்தது.

முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்ஷக்கள் மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் செய்த தவறுகளைத் திருத்துவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று அதே பிழைகளையே தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ளனர். அதே போன்று தற்போதைய அரசாங்கம் மக்களைச் சந்திக்க அஞ்சுகின்றது, அதன் காரணமாகவே மாகாண சபைத் தேர்தல்களை ஒத்தி வைத்துள்ளனர். அதேநேரம், "அரகலய" எனப்படும் காலிமுகத்திடல் போராட்டம் ஊடாக வீதிக்கு வந்தது சிங்கள மக்களே தவிர, தேசிய மக்கள் சக்தி அல்ல. ஆனால் காலிமுகத்திடல் போராட்டத்தின் உழைப்பை மக்கள் விடுதலை முன்னணி இன்று அப்படியே கைப்பற்றிச் சென்றுள்ளது.

அதன் அரசியல் பலனை இன்று மக்கள் விடுதலை முன்னணி அறுவடை செய்துள்ளது. "அரகலய" போராட்டமே இலங்கையில் இனவாத அரசியலை இல்லாமலாக்கியது சிங்கள இனவாதத்தைத் தோற்கடிக்க சிங்கள மக்களே முன்னின்றனர், அவர்கள் மாத்திரமல்ல, நாமும் காலம் காலமாக இனவாதத்திற்கு எதிராகவே செயல்பட்டோம். நாட்டில் இனி இனவாதம் மீண்டும் தலைதூக்க முடியாது. "அத்துடன் இனவாதத்திற்கு எதிரான சக்திகளை ஒழிக்க அரசாங்கம் முற்பட்டால், நாம் அதற்கு எதிராக முன்நிற்போம் - என்றார். (அ)

## சிறுவர் பாதுகாப்பு...

ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விவரங்களை வெளியிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் உயிரிழந்த மாணவியின் தாய், தந்தை மற்றும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு தங்களது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். கடந்த 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி, கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் 11ஆம் ஆண்டு மாணவியான தில்சி அம்சிகா விசித்திரமான முறையில் மரணமடைந்தார்.

இந்தச் சோகமான சம்பவம் நடந்து ஒரு வருடத்திற்கும் மேலாகிய போதிலும், மரணத்திற்கான உண்மையான காரணங்களோ அல்லது அதனுடன் தொடர்புடையவர்களுக்கான தண்டனையோ இன்னும் வழங்கப்படவில்லை என அவரது பெற்றோர் கண்ணீருடன் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் நடந்த ஆரம்ப காலப்பகுதியில் நாடு முழுவதும் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியதுடன், ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் பல்வேறு போராட்டங்களும் நடத்தப்பட்டன. இதன் விளைவாக, கடந்த 2025 மே மாதம் 9ஆம் திகதி பிரதமரின் அலுவலகத்தில் ஒரு முக்கிய கலந்துரையாடல் பிரதமர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர், சுகாதார அமைச்சர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட நாட்டின் உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். இச்சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும் என அந்த உயர் மட்டக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்வி அமைச்சின் மூலமும், நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக முத்துகல தலைமையிலான குழு ஒன்றின் மூலமும் விசாரணைகள் நடத்தப்பட்டு, அதற்கான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால், அந்த விசாரணை அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

இந்த மரணம் தொடர்பான வழக்கு தற்போது கொட்டாஞ்சேனை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, நீதிவான் நீதிமன்றத்தில் இரு வேறு வழக்குகளாக நிலுவையிலுள்ளது.

எனினும், பொலிஸார் தரப்பிலிருந்து உரிய நேரத்தில் மற்றும் முறையான வழிகளில் விசாரணைகள் நிறைவு செய்யப்படாததே இந்த வழக்கு தொடர்ந்து இழுத்தடிப்பதற்குக் காரணம் என இந்த ஊடக சந்திப்பில் குற்றம் சாட்டப்பட்டது. (அ)

## உலக சந்தையின்...

ஒரு நாட்டை ஆட்சி செய்யும்போது இயற்கை பேரிடர்கள், பொருளாதார வீழ்ச்சிகள் மற்றும் கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான முடிவுகள் போன்ற உள்நாட்டுப் பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது எனச் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக, 2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது, ஆட்சியாளர்களின் முறையற்ற நிர்வாகத்தால் பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளானதை நினைவு கூர்ந்த அவர், தற்போதைய அரசு இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பில்லியன் கணக்கில் இழப்பீடுகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தற்போது உள்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் விலை மாற்றமானது உள்நாட்டு நிர்வாகத் தவறு அல்ல, மாறாக அது முற்றிலும் சர்வதேச காரணிகளால் உருவானது என்று அவர் வலியுறுத்தினார். மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றம் மற்றும் உலகளாவிய எண்ணெய் வர்த்தகத்தில் 20 சதவீதத்திற்கும் அதிகமான பங்கைக் கொண்ட ஹோர்முஸ் நீரிணையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் உலக அளவில் எண்ணெய் விலையுயர்வுக்கு வழிவகுத்துள்ளன.

இந்த சர்வதேச யுத்த சூழலானது இலங்கை போன்ற நாடுகளை மட்டுமன்றி இந்தியா, வியட்நாம் மற்றும் சிங்கப்பூர் போன்ற வலுவான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளையும் கூட பாதித்துள்ளது. உலகப் பொருளாதாரத்தில் பெரும் பங்கைக் கொண்ட இந்தியாவே கடந்த சில வாரங்களில் நான்கு முறை எரிபொருள் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானதுடன், இந்திய ரூபாயின் மதிப்பிலும் ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## ஐந்து முக்கிய...

கொழும்பு தேசிய மருத்துவமனை , காலி கராப்பிட்டிய தேசிய மருத்துவமனை, கண்டி தேசிய மருத்துவமனை , அநுராதபுரம் போதனா மருத்துவமனை மற்றும் மஹரகம அபேக்ஷா புற்றுநோய் மருத்துவனை ஆகியவற்றுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஒரு இயந்திரத்தின் பெறுமதி 153 மில்லியன் ரூபாவாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கூடிய "சுகாதாரத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்" ஊடாக இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மத்தியில் மிகவும் பொதுவான புற்றுநோய் பாதிப்பாகக் காணப்படும் மார்பகப் புற்றுநோயை, ஆரம்ப கட்டத்திலேயே மிகவும் துல்லியமாகக் கண்டறிவதற்கும், அதற்கான தொடர் சிகிச்சைச் சேவைகளை வலுப்படுத்துவதற்கும் இந்த புதிய தொழில்நுட்பம் பெரிதும் உதவும் என அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, திருகோணமலை மற்றும் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனைகளின் அவசரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட இரண்டு மம்மோகிராபி இயந்திரங்களை அங்கு நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள அரச மருத்துவமனைகளில் 16 மம்மோகிராபி இயந்திரங்கள் மாத்திரமே பயன்பாட்டில் உள்ள நிலையில், இந்த புதிய சேர்க்கைகளுடன் அதன் மொத்த எண்ணிக்கை 23 ஆக அதிகரிக்கவுள்ளன.

நாடு முழுவதும் உள்ள முக்கிய போதனா மற்றும் பொது மருத்துவமனைகளில் தற்போது இச்சேவை வழங்கப்பட்டு வந்தாலும், இதற்கான கேள்வி அதிகமாகக் காணப்படுவதால் நோயாளர்கள் வாரக் கணக்கில் அல்லது மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

இந்த புதிய இயந்திரங்களின் வருகையினால் நோயாளர்களின் காத்திருப்பு நேரம் குறைவடைவதுடன், பொதுச் சுகாதாரத் துறையில் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளின் தரம் மற்றும் வேகம் அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பஸ் கட்டணங்களை அதிகரிக்கவேண்டும்

## தனியார் பஸ் உரிமையாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 01

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து, பேருந்து கட்டணங்களில் இடைக்கால திருத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்த சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, ஆண்டுதோறும் ஜூலை மாதம் மேற்கொள்ளப்படும் வழக்கமான பஸ் கட்டண திருத்தத்திற்கு முன்னதாக இந்த இடைக்கால திருத்தம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார். இதன்படி, வரும் ஜூன் மாதம் 02ஆம் திகதி முதல் பஸ் கட்டணங்களை 5 வீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர்பார்ப்ப தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போது காணப்படும் ஆகக்குறைந்த பஸ் கட்டணத்தை 32 ரூபா அல்லது 33 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, பஸ் உரிமையாளர்கள் தற்போது ஒரு பயணத்திற்கு சுமார் 25 ரூபா நட்டத்திலேயே சேவைகளை முன்னெடுத்து வருவதாகவும் கெமுனு விஜேரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வெசாக் தினத்தினை முன்னிட்டு யாழில் 312 பேருக்கு கண்புரை அறுவை சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவினால் வெசாக் தினைத்தை முன்னிட்டு 28ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் விசேட கண்புரை அறுவைச் சிகிச்சை நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் பிரதான நோக்கம் அநுராதபுரம் (பதவியா மற்றும் ஹொரோவபொத்தானை), வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த நோயாளர்களுக்கு கண்புரை அறுவைச் சிகிச்சை சேவைகளை வழங்குவதன் மூலம் தவிர்க்கக்கூடிய பார்வையிழப்பைத் தடுப்பதோடு, பின்தங்கிய சமூகங்களுக்கு தரமான கண் சுகாதார சேவைகளின் அணுகலை மேம்படுத்துவதாகும்.

அறுவைச் சிகிச்சையின்போது, யாழ்.போதனா வைத்தியசாலை, கண் மருத்துவ நிபுணர் வைத்தியர் எம். மலரவன், கண் அறுவைச் சிகிச்சை நிபுணர் மற்றும் வெளிக்கண் நோய் நிபுணர் வைத்தியர் எஸ். சுஜீவன், சிரேஷ்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் ரி. திலீபன் ஆகியோர் பங்கேற்று இருந்தனர்.

மூன்று நாள்கள் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 312 கண்புரை அறுவைச் சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

அவற்றில் 215 நோயாளர்கள் வெளி மாவட்டங்களிலிருந்து பங்கேற்றிருந்தனர். (அ)



# “பத்திரிகைத்துறையில் என் கதை” நூல் அறிமுகம் யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜூன். 01

வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய "பத்திரிகைத்துறையில் என்கதை" நூல் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின. கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஊடகத்துறை பேராரசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.பிரதீபராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கிறார்கள்.

வரவேற்புரை ஊடக கற்கைகள் துறை கழகத் தலைவர் ந.தனுஷ்காந்த். வாழ்த்துரை பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, கருத்துரைகள் கணபதி சர்வானந்தா, தெ. மதுசூதனன். (அ)

# ஜப்பானிடம் இருந்து இலங்கைக்கு 1.33 மில்லியன் டொலர் நிதி உதவி!



கொழும்பு, ஜூன் 01

'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த கிழக்கு மாகாண நன்னீர் கடற்றொழிலாளர்கள் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கில், ஜப்பான் அரசாங்கம் இலங்கைக்கு 1.33 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் கடந்த 29ஆம் திகதி கொழும்பில் அமைந்துள்ள ஜப்பானிய தூதரகத்தில், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் கையெழுத்திடப்பட்டது.

இந்தத் திட்டத்திற்கான தொழில்நுட்ப மற்றும் நடைமுறை உதவிகளை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு வழங்கவுள்ளது.

ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமதா மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி விம்லேந்திர ஷரன் ஆகியோர் கையெழுத்திட்டனர். (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் நிறுவனம் மக்கள் பாவனைக்கு!

## சுகாதார அமைச்சர் தலைமையில் திறப்பு விழா

கொழும்பு, ஜூன் 01

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் நிறுவனம் 99 மில்லியன் ரூபாய் செலவில் முழுமையாக நவீனமயமாக்கப்பட்டு, இன்று மக்கள் பயன்பாட்டிற்காக உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10:00 மணிக்கு நரம்பியல் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழா நிகழ்வு சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், இதில் சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனியும் கலந்துகொள்ளவுள்ளார்.

மூளை, தண்டுவடம், நரம்பு மண்டலம் மற்றும் தசைத் தொகுதி தொடர்பான கோளாறுகளால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான விசேட நரம்பியல் சிகிச்சைச் சேவைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த நவீனமயமாக்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த உட்கட்டமைப்பு மேம்பாடுகள் மூலம் இலங்கையின் நரம்பியல் சிகிச்சைச் சேவைகளின் தரம் மற்றும் செயல்திறன் கணிசமாக அதிகரிக்கும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 62 மற்றும் 63ஆம் இலக்க விடுதிகளை உள்ளடக்கிய, நரம்பியல் பிரிவின் புதிதாகப் புதுப்பிக்கப்பட்ட விடுதிகள் வளாகமும் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவுள்ளது.

இந்த வசதி ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி விடுதிகளைக் கொண்டுள்ளதுடன், ஒவ்வொன்றும் 22 படுக்கை வசதிகளைக் கொண்டுள்ளன. (அ)

# சர்ச்சைக்குரிய இலத்திரனியல் கடவுச்சீட்டு கொள்முதல் செயல்முறை உடனடியாக ரத்து!

கொழும்பு, ஜூன் 01

சர்ச்சைக்குரிய இலத்திரனியல் கடவுச்சீட்டு திட்டத்துடன் தொடர்புடைய கொள்முதல் செயல்முறையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ரத்து செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த குறிப்பிட்ட கொள்முதல் செயல்முறையை உடனடியாக ரத்து செய்யுமாறு அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளதாக, குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் மே 29 அன்று சம்பந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# ஒரு கோடி 15 இலட்சம் ரூபாய் பணமும் 25 பவுண் நகையும் 2 வீடுகளில் திருட்டு!

## வடமராட்சிப் பகுதியில் துணிகர சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 01

வடமராட்சிப் பகுதியில் இரு வீடுகளில் ஒரு கோடியே 15 இலட்ச ரூபாய் பணம் மற்றும் 25 பவுண் நகைகள் என்பவை களவாடப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள், வீட்டில் இருந்த ஒரு கோடியே 15 இலட்சம் ரூபாய் பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் சமையலறை ஊடாக புகுந்த திருடர்களே வீட்டில் இருந்த பணத்தைக் களவாடி சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன்.

குறித்த வீட்டு உரிமையாளர் சீட்டு பிடிக்கும் தொழில் செய்பவர் என்றும் , நேற்று முன்தினம் சனிக்கிழமை சீட்டு கூற இருந்த நிலையில், சீட்டுப் பணமான ஒரு கோடி 15 இலட்சம் ரூபாய் பணத்தை வீட்டில் பாதுகாப்பாக வைத்திருந்தவேளையே குறித்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் வீட்டில் இருந்த 25 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் காலையில் எழுந்தபோது, வீட்டின் முன் பக்க கதவுகள் திறந்து இருப்பதை அவதானித்து நகைகள் வைத்த இடத்திற்குச் சென்று பார்த்த போது , நகைகள் களவாடப்பட்டமை தெரியவந்தது.

நகைகள் களவாடப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media